RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22245

# புதுக்கவிதைகள் காட்டும் கற்புநெறி

சு. தேவி [அ, *], நா. பாலசுப்பிரமணியன் [அ]

[அ] தமிழ்த்துறை, சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர்-641602, இந்தியா.

# New Poetry Shows Virtue

S. Devi [a, *], N. Balasubramanian [a]

[a] Department of Tamil, Chikkanna Government Arts College, Tirupur-641602, India

* Corresponding Author: devis@gmail.com

Received: 27-02-2022
Revised: 08-04-2022
Accepted: 25-04-2022
Published: 30-04-2022

Check for updates

**ABSTRACT**

The word chastity, which was coined to describe the virtue of a man and a woman marrying, understanding and loving each other, later became a woman, her fasting, patience and the nature of existence which is the property of Mullai Nilam. While the literature of the time also emphasized this quality, new poetry sought to change these ideas. The result was feminist poetry and chastity poetry. The purpose of this article is to examine some of the poems related to chastity that arose from an analytical point of view.

**Keywords:** Woman, Nature, Feminist Poetry, Chastity Poetry, Drama

## முன்னுரை

கற்பு என்பது மனத்தூய்மையின் பிரதிபலிப்பே ஆகும். ஆனால் ஆணாதிக்க சமூகம் தொடங்கிய பின் கற்பு என்பது பெண்கள் மட்டுமே பின்பற்ற வேண்டிய பண்பாக உருமாற்றப்பட்டது. பழங்காலம் முதல் கற்பை இறையோடு தொடர்பு படுத்தி, அதையொரு புனிதப் பண்பாகக் கண்டனர். மனத்தூய்மையை வெளிப்படுத்திய கற்பென்னும் பண்பு, பின்னர் கன்னிமை சார்ந்த பண்பாகக் காட்டப்பட்டது. இத்தகைய கற்புக் கோட்பாட்டால் கைம்பெண் கொடுமை, உடன்கட்டை ஏறுதல் போன்ற சமூக அவலங்கள் அதிகரித்தன. அச்சம், மடம், நாணம் போன்ற பண்புகள் பெண்களின் இலக்கணமாய் உருவாயின. இந்நிலையில் பெண்ணடிமைக்கு வேராக இருக்கும் கற்பு என்னும் பண்பை மறுமதிப்பீடு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

### கற்பு - விளக்கம்

'கல்' என்ற சொல்லிலிருந்து தோன்றியது கற்பு என்ற சொல் ஆகும். கற்பிக்கப்படுவது கற்பு. கல்வியினால் உண்டாகும் ஞானமும் கற்பே. கற்பு என்பது கற்றலையும், திருமணத்தையும், தூய வாழ்வையும் குறிக்கிறது. களவு வாழ்விற்குப் பிறகு, தலைவன், தலைவியின் உறவை உறுதிப்படுத்த நிகழ்த்தப்படும் சடங்கே கற்பு எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே" (Puliyur Kesigan, 1961)

என்பது அந்நூற்பாவாகும்.

## கற்பு - பொது

கற்பு என்பது ஆண்பெண் இருவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் எனக் கவிஞர்கள் விரும்பினர்.

"கற்புநிலை என்று சொல்ல வந்தார் இரு

கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

என்பார் பாரதி (Rajasekaran, 2020).

"ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறு செய்தால்

அப்போது பெண்மையுங்கற் பழிந்தி டாதோ?

நாணற்ற வார்த்தை அன்றோ? வீட்டைச் சுட்டால்,

நலமான கூரையுந்தான் எரிந்தி டாதோ?"

என்று, பெண்களுக்கு மட்டுமே உரியது கற்பு என்ற தவறான கண்ணோட்டத்தைக் கண்டிக்கும் பாரதி, அதற்காக ஓர் உவமையைக் கூறி, ஆண் செய்யும் தவறு பெண்ணையும் பாதிக்கும் என்கிறார் (Rajasekaran, 2020).

முற்போக்குக் கவிஞர்கள் எல்லோருமே கற்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்றுதான் விரும்புகின்றனர்.

"கற்புநெறி ஒழுக்கமெல்லாம் பெண்களுக்கு மட்டுமென்றால்

கற்புநெறி ஒழுக்கத்தாலே கடுகளவும் பயனுமில்லே,

ஆண்களுக்கும் கற்புநெறி அவசியம் வேண்டுமிங்கே" (Malathi Harinthiran, 1994).

என்பது அப்படிப்பட்ட ஒரு கவிதையாகும். கற்பைப் பெண்ணுக்காக்கி, பெண்ணடிமையை வளர்த்த சமுதாயநிலையை முற்போக்குக் கவிதைகள் எதிர்த்து நிற்கின்றன.

கவிஞர் வைரமுத்து, கற்பு பெண்ணுக்கு மட்டுமா என்ற வினாவை எழுப்பி, கணவனின் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு, அவர்கள் அப்படிப்பட்ட கற்புடன்தான் வாழ வேண்டுமென்றால் அக்கற்பே தேவையில்லை என்கிறார்.

"தொட்டு மாலையிட்டோர் தோகையரைக் கூடியபின்

பெண்டிர்க்குக் கற்பென்று பேசினால் அக்கற்பே

இந்த உலகத்தில் இல்லா தொழியட்டும்

சந்தையிலும் விலைபோகாச் சரக்காகிப் போகட்டும்" (Vairamuthu, 2003)

என்பது அவரது கவிதையாகும். கணவனுக்குப் பணிந்து, குடும்பத்தார்க்கு அடங்கி வாழும் முறைதான் கற்பா?, ஆணுக்குக் கற்பு இல்லையா? எனத் தன் ஆதங்கத்தை இக்கவிதையில் வெளிப்படுத்துகிறார் கவிஞர் வைரமுத்து.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்

அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்." (Rajasekaran, 2020)

என்று பாரதி கூறுவது போல, ஆணும் பெண்ணும் சமமாய் வாழ்ந்தால் இவ்வுலகம் அறிவுடன் திகழும்.

## சபலம்

சபலம் என்பது, ஆணோ பெண்ணோ தன் வாழ்க்கைத் துணையைத் தவிர்த்து, பிற ஆண் மீதோ அல்லது பெண் மீதோ மயக்கம் கொள்வதாகும். கற்புநெறியுடன் வாழ சபலம் என்பது துளியும் இருக்கக்கூடாது. சபலம் தான் தவறுகள் நடைபெறக் காரணமாக அமைகின்றது. இதனை,

"சபலங்கள் நம் வீட்டு

வாசலிலே காத்திருக்கும்

சற்றே அயர்ந்திருந்தால் நம்

மனசுக்குள் இடம் கேட்கும்!"

என மு. மேத்தா குறிப்பிடுகிறார் (Metha, 1993). குறிப்பாக ஆண்கள் தான் சபலம் அடைவதாகவும் அதனாலே பெண்களின் கற்பு களவாடப்படுகிறது என்பதாகவும் அவர் குறிப்பிடுகிறார். பெண்கள் தலை குனிந்து சென்றாலும் இளையோர் இதயம் தளும்புகிறது. கை வளையல் கலகலத்தால் கள்ள மனங்கள் படபடக்கின்றன என்று குறிப்பிட்டு, ஆண்கள் கவனமுடன் இருக்க வேண்டும், சபலம் நெருங்க விடாது பார்த்துக் கொள்ள வேண்டும் என அவர் அறிவுரை கூறுகிறார்.

## கற்பின் உயர்வு

புதுக்கவிதைகள் பழமையை முற்றிலும் ஒதுக்கிவிடுவதில்லை. பழமையின் சிறப்புகளைத் தேவையான இடங்களில் சிறப்பிக்கின்றன. கற்பின் மேன்மையைப் புதுக்கவிதைகள் போற்றுகின்றன. அதே சமயம், கற்புநெறி என்பது பெண்ணிற்கு மட்டும் தான் என்று கூறும் பழைய நிலையை எதிர்க்கின்றன.

"ஒருவனுக்கிங் கொருத்தி யென்றே

உறுதி சொன்னதால்

உயர்வுடைய கற்பென்னும்

மணம் பிறந்தது"

என்பது அவ்வாறான ஒரு கவிதையாகும். அன்றிலிருந்து இன்றுவரை ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழும் நிலையைக் கற்பின் பண்பாகப் புதுக்கவிதைகளும் ஏற்கின்றன (Abdual Rahuman, 2016).

கற்புடன் வாழும் பெண்கள் தெய்வநிலைக்கு உயர்த்தப்படுவர் என்ற அறஇலக்கியக் கருத்தை வலியுறுத்துவதாகப் பின்வரும் அப்துல் ரகுமானின் கவிதை அமைகிறது.

"பேயென்றே பெண்குலத்தைப்

பேசுகின்ற பேயர்களும்

தாயென்றும் தெய்வமென்றும்

தலைவணங்கச் செய்ததெது?

புண்ணியத்தின் பயனாகிப்

பொற்புக்கோர் இலக்கணமாய்க்

கண்ணியத்தின் வடிவான

கண்ணகியின் கற்பன்றோ?"

என்பது அக்கவிதையாகும் (Abdual Rahuman, 2016).

அதாவது பெண்ணைத் தாயாக, தெய்வமாக உயர்த்துவதும், வணங்கச் செய்வதும் கற்பே என்று இக்கவிதையில் அப்துல் ரகுமான் விளக்குகிறார். மேலும், அவர் கற்பு பெண்டிர்க்குப் பாதுகாப்பு என்றும் பின்வருமாறு கூறுகிறார்.

"பொற்புடைய பருவத்துப்

பொக்கிஷமாம் பெண்களுக்குக்

கற்புடைமை அன்றோ, நற்காவல்?

மடந்தையர்கள்

பள்ளி அறை புகுமுன்

படிக்கின்ற பாடமது.

முள்ளிருக்கும் ரோஜாப்பெண்

குலத்திற்குக் காவல்முள்"

என்பது அக்கவிதையாகும் (Abdual Rahuman, 2016). இவ்வாறு இவர் பெண்களுக்குக் கற்பு, காவலாகவும், பாதுகாப்பாகவும் அமைகிறது எனக் குறிப்பிடுவது கற்பின் உயர்வைக் காட்டுகிறது.

யாருடைய வலுக்கட்டாயமும் இன்றி, சுய ஒழுக்கத்தோடு, நம்மை நாமாக வாழவிடுவதே கற்பு எனக் கற்புக்குப் புது விளக்கம் தருகிறார் கவிஞர் சுபத்ரா.

"கற்பென்பது ஓர் உணர்வு

யாருடைய வலுக்கட்டாயமுமின்றி

நான் நானாக இருக்கிறேன் என்ற நினைவு."

என்பது அக்விதையாகும். அதாவது, ஒருவருடைய விருப்பப்படி வாழ்வதே கற்பு. ஒருவருடைய மனம் சார்ந்ததே கற்பு. இதுவே முற்போக்குக் கவிஞர்கள் பலரின் கருத்தாகவும் உள்ளது (Subathra, 1990).

## கற்பின் பெயரால் அழிவு

பிறர்க்கும், கணவனுக்கும் பணிந்து வாழ்வதே கற்பு என்ற போதனையைப் பின்பற்றினால் பெண் சீரழிந்து விடுவாள். பழமையை உடைத்து உரிமையுடன் வாழ்வதே பெண்ணிற்குச் சிறப்பு என்று கவிஞர் வைரமுத்து பின்வருமாறு விளக்குகிறார்.

"கற்பொன்றில் மட்டும் கண்ணகியைப் போலிருங்கள்

மற்றவற்றில் அந்த மடமகளை மறந்திடுங்கள்

முப்போதும் கண்ணீரில் மோனநிலை கொண்டிருந்தால்

கடலுள் விழுந்த சிறு கடுகாகிப் போவீர்கள்

இடருள் சிக்குண்டே எருக்கம்பூ ஆவீர்கள்

கருவுடைந்த முட்டையெனக் கலங்கித் தவிப்பீர்கள்

வருத்தத்தில் தானுங்கள் வாழ்நாளைக் கழிப்பீர்கள்

சூறைக் காற்றுக்குள் அகப்பட்ட

பஞ்சினைப்போல் அலைந்தே அழிவீர்கள்"

என்பது அக் கவிதையாகும். அதாவது, ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்ந்த கண்ணகியின் கற்புநெறியை மட்டும் ஏற்றுக்கொண்டு, கண்ணகியின் பிறவாழ்வு முறையைப் பின்பற்ற வேண்டாம் என இக் கவிதையில் அறிவுரை கூறுகிறார் கவிஞர் வைரமுத்து (Vairamuthu, 2003).

## கற்பின் சரியான புரிதல்

சமுதாயத்தில் ஒழுக்கத்தையும் நல்நெறியையும் வளர்த்தெடுக்கக் கற்பிக்கப்பட்ட கற்பென்னும் நெறி, காலப்போக்கில் பெண்ணினத்திற்குரியதாகவும், பெண்கள் பின்பற்றவேண்டிய ஒழுக்கமாகவும் கற்பிக்கப்பட்டது. இந்நிலைக்கெதிராகப் புதுக்கவிதைகள் எழுந்தன.

நாணமும் அச்சமும் பெண்களின் பண்புகள் என வலியுறுத்தப்பட்ட அறஇலக்கியச் சிந்தனைகளுக்கெதிராக பாரதி,

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்"

என்றுரைக்கிறார் (Rajasekaran, 2000). பெண்களுக்குரியது கற்பு எனக் கூறப்பட்டது போலவே, ஆண்களுக்குத் தொண்டு செய்பவர்களே பெண்கள் என்ற நிலையும் உருவாக்கப்பட்டது.

இச்சிந்தனைக்கெதிராக பாரதிதாசன்,

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும்திருநாட்டு

மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே"

என்கிறார் (Rajasekaran, 2000). வீட்டிலும், சமூகத்திலும் பெண் விடுதலை பெற்றால்தான் நாடே விடுதலை பெறும் என்ற இவரின் இக் கருத்து, பெண்ணினத்தின் முன்னேற்றத்திற்கு உதவுவதாக அமைந்துள்ளது.

## முடிவுரை

கற்பு பற்றிய பாடுபொருள் கொண்ட புதுக்கவிதைகள் சற்று அதிகமாகவே தோன்றியுள்ளன. இவை பெண்கள் எவ்வாறு வாழவேண்டும் என்ற படிப்பினைகளைத் தருகின்றன. அதிக சுதந்திரம் கொண்டு பெண்கள் அழியும் நிலையைப் புதுக்கவிதைகள் சுட்டிக் காட்டுகின்றன. பெண்ணின முன்னேற்றத்திற்கு எதிரான கருத்துகளுக்குப் புதுக்கவிதைகள் கண்டனக் கவிதைகளாக அமைகின்றன. பெண்களுக்குப் பாதுகாப்பாக அமைகின்ற கற்பு நெறியைப் புதுக்கவிதைகள் சிறப்பித்துப் பாடுகின்றன. ஆனால் அக்கற்பையே காரணம் காட்டிப் பெண்களை அடிமைப்படுத்தும் நிலையை இவை கண்டிக்கவும் செய்கின்றன.

## References


Abdual Rahuman, (2016) Iranthathal Piranthavan, National Publication, Chennai, India

Malathi Harinthiran, (1994) Malathi Harinthiran Kavithaigal, Poonkodi Pathippagam, Chennai, India

Metha, M. (1993) Mugathuku Mugam, Thirumagal Nilayam, Chennai, India

Puliyur Kesigan, (1961) Tholkapiyam, Aruna Publications, Chennai, India

Rajasekaran, (2020) Bharathiar Kavithaigal, Saradha Pathipagam, Chennai, India

Subathra, (1990) Enthal Thola, Manitham, Kirafity, Trichy, India

Vairamuthu,(2003) Vaikarai Mekankal, Soorya Ilakiyam, Chennai, India


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License